**செ.வெ.எண் -21** **நாள்: 13.12.2018**

# பத்திரிக்கைச் செய்தி

15.12.2018 அன்று தமிழக வடக்கு கடற்கரையோர மாவட்டங்களில் பெய்தா புயல் கரையைக் கடக்க இருப்பதால் விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்:

கடந்த மாதம் 16-ஆம் தேதியன்று நாகப்பட்டினம் வேதாரண்யம் அருகே அதிவேகத்துடன் கரையைக் கடந்த கஜா புயலின் காரணமாக நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை உள்ளிட்ட பல மாவட்டங்களில் தென்னை, மா, பலா மற்றும் பல்லாண்டு மரப்பயிர்கள் பலத்த சேதத்திற்குள்ளாயின.

தற்போது எதிர்வரும் 15.12.2018 அன்று பெய்தா புயல் தமிழகத்தின் வடக்கு கடற்கரையோர மாவட்டங்களில் திருவள்ளூர் மாவட்டத்திலிருந்து, நாகப்பட்டினம் மாவட்டம் இடையே கரையைக் கடக்கும் என வானிலை ஆய்வு நிலையம் முன்னறிவிப்பு செய்துள்ளது. இதன் காரணமாக கனமழையுடன் பலத்த காற்றும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் தென்னை உள்ளிட்ட பல்வேறு பல்லாண்டு பயிர்களை பயிரிட்டுள்ள விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை விவரம் பின்வருமாறு

**1. தென்னை**

1.ஏழு முதல் நாற்பது ஆண்டுகளுக்கு உட்பட்ட அதிக மகசூல் தரும் தென்னை மரங்கள் பாதிக்குமென எதிர்பார்க்கப்படுவதால் இத்தகைய மரங்களை கண்டறிந்து அதிலுள்ள தேங்காய், இளநீர் மற்றும் அதிக பாரமுள்ள தென்னை ஓலைகளையும் அகற்ற வேண்டும். இதன்மூலம் இத்தகைய மரங்களில் தலைபாரம் வெகுவாக குறைந்து புயலினை தாங்கி நிற்கும் வாய்ப்புகள் அதிகம் உள்ளது.

2.எதிர்வரும் நான்கு நாட்களுக்கு தென்னை தோப்புகளில் நீர் பாய்ச்சுவதை நிறுத்தி விட வேண்டும். இதன்மூலம் வேர்ப் பகுதி நன்றாக இறுகி காற்றிலிருந்து சாயாமல் இருக்க வாய்ப்பு ஏற்படும்.

**2. மா, பலா மற்றும் முந்திரி பல்வேறு தோட்டக்கலைப் பயிர்கள்**

1.புயல் காற்று வீசும் சமயம் காற்று மரங்களின் ஊடே புகுந்து இலகுவாக செல்லும் வகையில் பக்கவாட்டுக் கிளைகளையும் அதிகப்படியான இலைகளையும் கவாத்து செய்து மரம் வேரோடு சாய்ந்து விடுவதை தடுக்கலாம். கவாத்து செய்த இடங்களில் காப்பர் ஆக்ஸிகுளோரைடு ஒரு லிட்டர் நீரில் 300 கிராம் கலந்த கலவை கொண்டு பூச வேண்டும்.

2.தோப்புகளுக்கு நீர் பாய்ச்சுவதை இரண்டு நாட்களுக்கு முன்பே நிறுத்திவிடுவதன் மூலம் வேர்ப்பகுதி இறுகி மரம் காற்றில் சாயாமல் தடுக்கலாம்.

3.உரமிடுதல் போன்ற பணிகளை மரத்தை சுற்றி மண் அகற்றி தற்சமயம் மேற்கொள்ளாமல் புயல் கடந்த பின் மேற்கொள்வது சிறந்தது.

4.வாழைத் தோப்பினைச் சுற்றி வாய்க்கால் எடுத்து மழைநீர் தேங்காமல் வெளியேற வழிவகை செய்ய வேண்டும்.

5.வேம்பு, பூவரசு, புங்கன் போன்ற மரங்களின் கிளைகளை முழுவதும் வெட்டி தழைகளை குறைப்பதன் மூலம் மரங்கள் புயலிலிருந்து பாதுகாக்கலாம்.
இவ்வாறு வெட்டி அகற்றிய இலைகளைக் கொண்டு பசுந்தழை உரமாக பயன்படுத்தலாம்.

6.நெல், பயறு வகைகள், சிறுதானியங்கள், பருத்தி, கரும்பு, நிலக்கடலை போன்ற பயிர்களுக்கு வயல்களை தண்ணீரை வடித்து வடிகால் வசதியினை நன்றாக ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**